ను, ఇందుపమాలంకారము ఆంధ్రమునందుబ[illegible] దిక రిణోపమా

ర్ణము (కందము పురళెర గణముల నందము గా భ జ స నలవ

జగణముండదు బేసి॥

సీ॥ తనభవ్యధామంబు తనభవ్యధామంబు* కరణిమి

ముల* స్లితులితశ్రుతి మార్గగతుల నెసఁగఁ। వనమహ

దనయుంబకంబు బదన [illegible]ంబకముల ట్లు* పరభీరువి

కూటకిటిగూఢచరణదికో[illegible]టికరటి। కుటిల [illegible]సమా

తనభవ్యధామంబు తనభవ్యధామంబు కరణిఁ - ప్ర

ప్రతాపము తనయొక్క - శుభకరమయిన గృహము వలె* మి

(మిత్రంసుహృదిమిత్రోరవి - ఇతివిశ్వః)* సూర్యప్రకాశకర

మాచుండగా ననిగ్రహపరమైన యర్థము* తనధర్మగు

మును (ధర్మః పుణ్యేయమే న్యాయేస్వభావాచారయోః

గుణమనగా వారియు గుణమును* తనయొక్క చాపశింజి

ల నెసగఁ - శ్రుతియనగా కర్ణమును వేదమును* అతుల

ర్జనముల చేత* ఎసగఁ వొప్పుచుండగా ననిచాపశింజి

గా ననిన్యాయగుణపరమైన యర్థము* తనమహోహవదీ

గా యజ్ఞము - తనయొక్క - అధికమైన యుద్ధదీక్ష తనయొక్క

గా రాజులు వనీపకులనగా యాచకులు* పెంపు అనగా

உ

கடவுள் துணை.

தமிழ்வேதமாகிய

தேவாரப்பதிகங்களுள்

பதினைந்துபதிகம்

அடங்கியிருக்கின்றன

நுங்கம்பாக்கம்

அருணகிரி முதலியார்

அவர்களது

அம்பாளச்செந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை-ஆனைகெவுனி-பொம்மலையாதெருவு

1-வது நெ. வீடு.

1897.

உ

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிய

திருப்பிரமபுரத்திருப்பதிகம்

பண்-நட்டபாடை.

தோடுடைய செவியன் விடையேறியோர் தூ வெண்மதிசூடிக்- காடுடைய சுடலைப்பொடிபூசி யென்னுள்ளங்கவர்கள்வ- னேடுடையமல ரானமுனை நாட்பணிந்தேத்தவருள்செய்த - பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. க

முற்றலாமையிள நாகமோடேனமுளைக் கொம்பவைபூண்டு - வற்றலோடுகலனாப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன் - கற்றல்கேட்டலுடையார் பெரியார் கழற்கையாற்றொழுதேத்தப் - பெற்றமூர்ந்தபிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே. உ

நீர்பறந்த நிமிர்புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி- யேர்பரந்தவினவெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வ- னூர்பறந்தவுலகின் முதலாகிய வோரூரிதுவென்னப்- பேர்பறந்த பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. ங

விண்மகிழ்ந்த மதிலெய்ததுமன்றி விளங்குதலையோட்டி- லுண்மகிழ்ந்துபலிதேரியவந்தெனதுள்ளங்கவர்கள்வன்- மண்மகிழ்ந்தவரவம்மலர்க்கொன்றைமலிந்த வரைமார்பிற்- பெண்மகிழ்ந்த பிரமாபுர மேவியபெம்மானிவனன்றே. ச

ஒருமைபெண்மையுடையன் சடையன்விடை யூருமிவனென்ன- வருமையாகவுரைசெய்ய வமர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன் -கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர்காலமிதுவென்னப்- பெருமைபெற்றபிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. ௫

மறைகலந்தவொலிபாடலோடாடல ராகிமழுவேந்தி - யிறைகலந்தவினவெள்ளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன் - கறைகலந்தகடியார்பொழினீடுயர் சோலைக்கதிர்சிந்தப்- பிறைகலந்த பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே ௬

சடைமுயங்குபுனலன்னனலன்னெறி வீசிச்சதிர்வெய்த-வுடைமுயங்குமரவோடுழிதந்தெனதுள்ளங்கவர்கள்வன்- கடன்முயங்குகழி சூழ்குளிர்கானலம்பொன்னஞ்சிறகன்னம்- பெடைமுயங்கு பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. ௭

வியரிலங்குவரையுந்தியதோள்களை வீரம்விளைவித்த- வுயரிலங்கையரையன்வலிசெற்றன துள்ளங்கவர்கள்வன்-றுயரிலங்கும்முகிற் பலவூழிகடோன்றும்பொழுதெல்லாம் - பெயரிலங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. ௮

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமரையாணு -நீணுதல்செய்தொழி யன்னிமிர்ந்தானெனதுள்ளங்கவர்கள்வன் - வாணுதல்செய்மகளிர்முதலாகியவையத்தவரேத்தப்- பேணுதல்செய்பிர மாபுரமேவியபெம்மானிவனன்றே. ௯

தேவாரப்பதிகங்கள்.

புத்தரோடுபொறி யில்சமணரும்புறங் கூறநெறி
நில்லா- வொத்தசொல்லவுலகம் பலிதேர்ந்தென துள்
ளங்கவர்கள்வன்- மத்தயானைமறுகவ்வுரிபோர்த்ததோ
ர்மாயமிதுவென்னப்- பித்தர்போலும்பிரமாபுரமேவிய
பெம்மானிவனன்றே. ௰

அருநெறியமறைவல்ல முனியகன்பொய்கையலர்
மேய - பெருநெரியபிர மாபுரமேவிய பெம்மானிவன்ற
னனை - யொருநெரியமனம்வைத்துணர்ஞானசம் பந்த
னுரைசெய்த - திருநெறியுந்தமிழ்வல்லவர்தொல்வினை
தீர்தலெளிதாமே ௰௧

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிய

திருவாலவாய்த்திருநீற்றுப்பதிகம்- பண்காந்தாரம்.

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்றிரு வாலவாயான்றிருநீறே ௧

வேதத்திலுள்ளதுநீறு வெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறு புன்மைதவிர்ப்பதுநீறு
ஓதத்தகுவதுநீறு உண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்த திருவாலவாயான்றிருநீறே ௨

முத்திதருவதுநீறு முனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறு தக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறு பரவவினியதுநீறு
சித்திதருவதுநீறு திருவாலவாயான்றிருநீறே ௩

காணவினியதுநீறு கவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறு மதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறு திருவாலவாயான்றிருநீறே. ச

பூசவினியதுநீறு புண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறு பெருந்தவத்தோர்களுக்கெல்லா
மாசைகொடுப்பதுநீறு அந்தமாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறு திருவாலவாயான்றிருநீறே. ரு

அருத்தமாவதுநீறு அவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறு வானமளிப்பதுநீறு
பொருத்தமாவதுநீறு புண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தமாளிகைசூழ்ந்த திருவாலவாயான்றிருநீறே. சு

எயில்கலையிட்டதுநீறு விருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறு பாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறு சுத்தமதாவதுநீறு
வயிலைப்பொலிதருசூலத் தாலவாயான்றிருநீறே. எ

இராவணன்மேலதுநீறு எண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறு பாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறு தத்துவமாவதுநீறு
அராவணங்குந்திருமேனி யாலவாயான்றிருநீறே. அ

மாலொடயனறியாத வண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கண் மெய்யதுவெண்பொடிநீறு
ஏலவுடம்பிடர்தீர்க்கு மின்பந்தருவதுநீறு
ஆலமுதுண்டமிடற்றெம் மாலவாயான்றிருநீறே. கூ

குண்டிகைக்கையர்களோடு சாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறு கருதவினியதுநீறு
எண்டிசைபட்டபொருளா ரேத்துந்தகையதுநீறு
அண்டத்தவர்பணிந்தேற்று மாலவாயான்றிருநீறே ௰

ஆற்றலடல்விடையேறு மாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும் பூசுரன்ஞானசம்பந்தன்
தேற்றித்தென்னனுட லுற்றதீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்நல்லவர்தாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிகள் அருளியகோளறுபதிகம்

பண்-பியந்தக்காந்தாரம்.

வேயுறுதோளிபங்கன் விடமுண்டகண்டன்மிகந
ல்லவீணைதடவி - மாசறுதிங்கள் கங்கைமுடிமேலணிந்
தெனுளமேபுகுந்தவதனால்- ஞாயிறுதிங்கள் செவ்வாய்
புதன்வியாழம்வெள்ளிசனிபாம்பிரண்டுமுடனேயாசறு
நல்லநல்ல வவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. ௧

என்பொடுகொம்பொடாமை யிவைமார் பிலங்க
வெருதேறியேழையுடனே - பொன்பொதிமத்தமாலைபு
னல்சூடிவந்தெனுளமே புகுந்தவதனா - லொன்பதொ
டொன்றோடேழுபதினெட்டோடாறு முடனாயநாட்க
ளவைதா - மன்பொடுநல்லநல்ல வவைநல்லநல்லவடி
யாரவர்க்குமிகவே ௨

உருவளர்பவளமேனியொளிநீறணிந்துஉமையோ
டும்வெள்ளைவிடைமேன், முருகலர்கொன்றைதிங்கண்

முடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனாற்- றிருமகள்க
லையதூரதிசயமாதுபூமி திசைதெய்வமானபலவு - மரு
கெறிநல்லநல்ல வவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே.

மதிநுதன்மங்கையோடுவடபாலிருந்துமறையோ
துமெங்கள்பரம- னதியொடுகொன்றைமாலைமுடிமேல
ணிந்தெனுளமே புகுந்தவதனாற்- கொதியுறுகாலனங்கி
நமனொடு தூதர்க்கொடுநோய்களானபலவு-மதிகுண ந
ல்லநல்ல வவைநல்லநல்ல வடியாரவர்க்குமிகவே உ

நஞ்சணிகண்ட னெந்தை மடவாடனோடு விடை
யேறுநங்கள்பரமன் - றுஞ்சிருள்வன்னி கொன்றைமு
டிமேலணிந் தெனுளமேபுகுந்தவதனால்-வெஞ்சினவவு
ணரோடுமுருமிடியுமின்னுமிகையானபூதமவையு- மஞ்
சிடுநல்லநல்ல வவைநல்லநல்ல வடியாரவர்க்குமிகவே

வாளரியதளதாடை வரிகோவணத்தர் மடவாட
னோடுமுடனாய் - நாண்மலர்வன்னிகொன்றை நதிசூடி
வந்தெனுளமேபுகுந்தவதனாற்-கோளரியுழுவையோடு
கொலையானகேழல்கொடுநாகமோடுகரடி- யாளரிநல்ல
நல்லவவைநல்லநல்ல வடியாரவர்க்குமிகவே சு

செப்பிளமுலைகள்மங்கை யொருபாகமாகவிடை
யேறுசெல்வனடைவா- ரொப்பிளமதியுமப்பு முடிமே
லணிந்தெனுளமே புகுந்தவதனால்- வெப்பொடுகுளிரு
ம்வாதமிகையானபித்தம் வினையானவந்துநலியா-வப்ப
டிநல்லநல்ல வவைநல்லநல்லடியா ரவர்க்குமிகவே. எ

வேள்படவிழிசெய்தன்று விடைமேலிருந்த மட
வாடனோடுமுடனாய்- வாண்மதிவன்னி கொன்றைமலர்

சூடிவந்தெனுளமேபுகுந்தவதனு - லேழ்கடல்சூழிலங்
கையரையன்றனோடுமிடரானவந்துநலியா- வாழ்கடல
ல்லநல்லவவைநல்லவடியாரவர்க்குமிகவே. ௮

பலபலவேடமாகும்பரனாரிபாகன் பசுவேறுமெங்
கள்பரமன்- சலமகளோடெருக்குமுடிமேலணிந்தெனு
ளமேபுகுந்தவதனுன் - மலர்மிசையோனுமாலு மறை
யொடுதேவர்வருகாலமானபலவு, மலைகடன்மேருநல்லவ
வைநல்ல வடியாரவர்க்குமிகவே. ௯

கொத்தலர்குழலியோடு விசயர்க்குநல்கு குணமா
யவேடவிகிர்தன்-மத்தமுமதியுநாக முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனாற்- புத்தரொடமணைவாதிலழிவி
க்குமண்ணறிருநீறு செம்மைதிடமே -யத்தகுநல்லநல்
லவவைநல்லநல்ல வடியாரவர்க்குமிகவே, ௰

தேனமர்பொழில்கொளாலைவிளைசெந்நெறுன்னி
வளர்செம்பொனெங்குநிகழ - நான்முகனாதியாய்பிரமா
புரத்துமறைஞானமுனிவன் -றானுறுகோளுநாளுமடி
யாரைவந்துநலியாதவண்ணமுரைசெய் - யான்சொன்
மாலையோதுமடியார்கள்வானிலரசாள்வாராணைநமதே.

திருஞானசம்பந்தசுவாமிகளருளிய.

பஞ்சாட்சரப்பதிகம்-பண்-காந்தாரபஞ்சமம்.

துஞ்சலுந்துஞ்ச லிலாதபோழ்தினு
நெஞ்சகநைந்து நினைமினுடொறும்
வஞ்சமகற்றடி வாழ்த்தவந்தகூற்
றஞ்சவுதைத்தன வஞ்செழுத்துமே.

மந்திரநான்மறை யாகியானவர்
சிந்தையுநின்றவர் தம்மையாளவன்
செந்தழலோம்பிய செம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திர மஞ்செழுத்துமே. ௨

ஊனிலுயிர்ப்பை யொடுக்கியொண்சுடர்
ஞானவிளக்கினை யேற்றிநன்புலத்
தேனைவழிதிறந் தேத்துவார்க்கிட
ரானகெடுப்பன வைஞ்செழுத்துமே. ௩

நல்லவர்தீய ரெனாதுநச்சினர்
செல்லல்கெடச்சிவ முத்திகாட்டுவ
கொல்லநமன்றமர் கொண்டுபோமிடத்
தல்லல்கெடுப்பன வஞ்செழுத்துமே. ௪

கொங்கலர்வன்மதன் வாளியைந்தகத்
தங்குளபூதமு மஞ்சவைம்பொழிற்
றங்கரவின்பட மஞ்சுதம்முடை
யங்கையிலைவிர லஞ்செழுத்துமே. ௫

தும்மலிருமல் தொடர்ந்தபோழ்தினும்
வெம்மைநரகம் விளைந்தபோழ்தினு
மிம்மைவினையடர்த் தெய்துபோழ்தினு
மம்மையினுந்துணையஞ்செழுத்துமே. ௬

வீடுபிறப்பை யறுத்துமெச்சினர்
பீடைகெடுப்பன பின்னைநாடொறு
மாடுகொடுப்பன மன்னுமாநட
மாடியுகப்பன வஞ்செழுத்துமே. ௭

வண்டமரோதி மடந்தைபேணின
பண்டையிராவணன் பாடியுய்ந்தன
தொண்டர்கள்கொண்டு துதிப்பினன்னவர்க்
கண்டமளிப்பன வஞ்செழுத்துமே. அ

கார்வணனான்முகன் காணுதற்கொணாச்
சீர்வணச்சேவடிசெவ்விநாடொறும்
பேர்வணம்பேசிப் பிதற்றும்பித்தர்கட்
கார்வணமாவன வஞ்செழுத்துமே. ௯

புத்தர்சமணர்கழுக் கையர்பொய்கொளாச்
சித்தத்தவர்க டெளிந்துதேறின
வித்தகநீறணி வார்வினைப்பகைக்
கத்திரமாவன வஞ்செழுத்துமே. ௰

நற்றமிழ்ஞான சம்பந்தனான்மறை
கற்றவன்காழியர் மன்னனுன்னிய
வற்றமின்மாலை யீரைந்துமைஞ்செழுத்
துற்றனவல்லவ ரும்பராவரே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிய
நமச்சிவாயப்பதிகம் பண் கௌசிகம்.

காதலாகிக்கசிந்து கண்ணீர்மல்கி
யோதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினு மெய்ப்பொருளாவது
நாதநாம நமச்சி வாயவே. க

நம்புவாரவர் நாவினவிற்றினல்
வம்பினாண்மலர் வார்மதுவொப்பது

செம்பொனார்தில தம்முலகுக்கெலா
நம்பனாம நமச்சிவாயவே ௨
நெக்குளாரவமிகப் பெருகிநினைந்
தக்குமாலை கொடங்கையிலெண்ணுவார்
தக்கவானவ ராத்தகுவிப்பது
நக்கனாம நமச்சிவாயவே. ௩
இயமன்றூதரு மஞ்சுவரின்சொலா
னயம்வந்தோத வல்லார்தமைநண்ணினு
னியமந்தானினை வார்க்கினியானெற்றி
நயனனாம நமச்சிவாயவே. ௪
கொல்வாரேனுங் குணமபலநன்மைக
ளில்லாரேனு மியம்புவராயிடி
வெல்லாத்தீங்கையு நீங்குவரென்பரா
னல்லார்நாம நமச்சிவாயவே. ௫
மந்தரம்மன பாவங்கண்மேவிய
பந்தனையவர் தாமும்பகர்வரேற்
சிந்தும்வல்வினை செல்வமுமல்குமா
னந்திநாம நமச்சிவாயவே. ௬
நரகமேழ்புக நாடினராயினு
முரைசெய்வாயின ராயினுருத்திரர்
நிரவியேபுகு வித்திடுமென்பரால்
வரதநாம நமச்சிவயவே. ௭
இலங்கைமன்ன னெடுத்தவடுக்கன்மேற்
றலங்கொள்கால்விரல் சங்கரனூன்றலு

மலங்கிவாய்மொழி செய்தவனுய்வகை
னலங்கொணாம நமச்சிவாயவே. ௮

போதன்போதன கண்ணனுமண்ணறன்
பாதந்தான்முடி றேடியபண்பரா
யாதுங்காண்பரி தாகியலந்தவ
ரோதுநாம நமச்சிவாயவே. ௯

கஞ்சிமண்டையர் கையிலுண்கையர்கள்
வெஞ்சொன்மிண்டர் விரவிலரென்பரால்
விஞ்சையாண்டர்கள் வேண்டவமுதுசெய்
நஞ்சுண்டகண்ட நமச்சிவாயவே. ௰

நந்திநாம நமச்சிவாயவெனுஞ்
சந்தையாற்றமிழ் ஞானசம்பந்தன்சொற்
சிந்தையான்மகிழ்ந் தேத்தவல்லாரெல்லாம்
பந்தபாச மறுக்கவல்லார்களே. ௰௧

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய
திருமயிலாப்பூர் பூம்பாவைத் திருப்பதிகம்.

பண்-சீகாமரம்.

மட்டிட்டபுன்னையங்கான மடமயிலைக் - கட்டிட்
டங்கொண்டான் கபாலீச்சரமமர்ந்தா னொட்டிட்டப
ண்பினுருத்திரபல்கணத்தார்க் - கட்டிட்டல்காணாதே
போதியோ பூம்பாவாய் ௧

மைப்பயந்தவொண்கண் மடநல்லார்மாமயிலை- கை
ப்பயந்தநீத்தான் கபாலீச்சரமமர்ந்தா னைப்பசியோண
விழாவு மருந்தவர்க- ளுய்ப்பனவுங் காணாதே போதி
யோபூம்பாவாய். ௨

வளைக்கைமடநல்லார் மாமயிலைவண்மறுகிற்-றுள
க்கில் கபாலீச்சரத்தான் றொல்கார்த்திகைநாட்- டளத்
தேந்திளமுலையார் தையலார்கொண்டாடும்- விளக்கீடு
காணாதேபோதியோ பூம்பாவாய், ௩

ஊர்திரைவேலை யுலாமுயர்மயிலைக் - கூர்தருவேல்
வல்லார்கொற்றங்கொள சேரிதனிற்- கார்தருசோ
லைக்கபாலீச்சரமமர்ந்தா- னாதிரைநாட்காணாதேபோதி
யோ பூம்பாவாய். ௪

மைப்பூசுமொண்கண் மடநல்லார்மாமயிலைக்-கைப்
பூசுநீற்றான் கபாலீச்சரமமர்ந்தா- னெய்ப்பூசுமொண்பு
ழுக்க னேரிழையார்கொண்டாடுந் - தைப்பூசங்காணா
தேபோதியோ பூம்பாவாய். ௫

மடலார்ந்ததெங்கின மயிலையார்மாசிக்
கடலாட்டுக்கண்டான் கபாலீச்சரமமர்ந்தா
னடலானேறூரு மடிகளடிபரவி
நடமாடல்காணாதே போதியோபூம்பாவாய். ௬

மலிவிழாவீதி மடநல்லார்மாமயிலைக்
கனிவிழாப்பாடல்செய்பங்குனியுத்திரநா
பலிவிழப்பாடல்செய் பங்குனியுத்திரநா
ளொலிவிழாக்காணாதே போதியோபூம்பாவாய் ௭

தண்ணாவரக்கன்றோள் சாய்த்துகந்தாளினான்
கண்ணார்மயிலைக் கபாலீச்சரமமர்ந்தான்
பண்ணார்பதினெண் கணங்கடமட்டமிநாட்
பண்ணாரக்காணாதே போதியோபூம்பாவாய். ௮

நற்றாமரைமலர்மே லான்முகனு நாரணனு
முற்றாங்குணர்கிலா மூர்த்திதிருவடியைக்
கற்றார்களேத்துங் கபாலீச்சரமமர்ந்தான்
பொற்றாப்புக்காணாதே போதியோபூம்பாவாய்
உரிஞ்சாயவாழ்க்கை யமணுடையைப்போர்க்கு
மிருஞ்சாக்கியர்க ளெடுத்துரைப்பநாட்டிற்
கருஞ்சோலைசூழ்ந்த கபாலீச்சரமமர்ந்தான்
பெருஞ்சாந்திகாணாதே போதியோபூம்பாவாய்.
காணமர்சோலைக கபாலீச்சரமமர்ந்தான்
றேனமர்பூம்பாவை பாட்டாகச்செந்தமிழால்
ஞானசம்பந்தனலம்புகழ்ந்த பத்தும்வல்லார்
வானசம்பந்தத்தவரோடு வாழ்வாரே.

திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிய
திருவாலவாய்ப்பதிகம்.
பண்-புறநீர்மை.

மங்கையர்க்கரசி வளவர்கோன்பாவை வரிவளைக்
கைம்மடமானி-பங்கயச்செல்வி பாண்டிமாதேவி பணி
செய்துநாடொறும்பரவ-பொங்கழ லொருவன்பூதநாய
கனால் வேதமும்பொருள்களுமருளி - யங்கயற்கண்
ணிதன்னொடுமமர்ந்த வாலவாயாவதுமிதுவே ௧
வெற்றவேயடியா ரடிமிசைவீழும் விருப்பினன்
வெள்ளைநீறணியுங்- கொற்றவன்றனக்கு மந்திரியாய்கு
லச்சிறைகுலாவிநின்றேத்து- மொற்றைவெள்விடைய
னும்பரார்தலைவ னுலகினிலியற்கையை யொழிந்திட்
டற்றவர்க்கற்றசிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே

செய்துவர்வாயாள் சேலனகண்ணாள் சிவன்றிருநீற்றினைவளர்க்கும்-பந்தணைவிரலாள்பாண்டிமாதேவி பணிசெயப்பாரிடைநிலவுஞ் - சந்தமார்தரளம்பாய்புநீர்மத்தந்தண்ணெருக்கம்மலர்வன்னி - யந்திவான்மதிசேர்சடைமுடியண்ண லாலவாயாவது மிதுவே. ௩

கணங்களாய்வரினுந் தமியராய்வரினு மடியவர்தங்களைக்கண்டாற்-குணங்கொடுபணியுங்குலச்சிறைபரவுங் கோபுரஞ்சூழ்மணிக்கோயின்- மணங்கமழ்கொன்றைவாளராமதியம்வன்னிவண்கூவிளமாலை- யணங்குவீற்றிருந் தசடைமுடியண்ணலாலவாயாவதும் இதுவே,

செய்யதாமரைமே லன்னமேயனைய சேயிழைதிருநுதற்செல்வி - பையரவல்குற் பாண்டிமாதேவி நாடொறும்பணிந்தினிதேத்த- வெய்யவேற்சூலம்பாசமங்குசமான்விரிகதிர்மழுவுடன்றரித்த-வையனாருமையோடின்புறுகின்ற வாலவாயாவதும் இதுவே ௫

நலமிலராகநலமதுண்டாகநாடவர்நாடறிகின்ற - குலமிலராகக்குலமதுண்டாகத்தவபணிகுலச்சிறைபரவும்- கலைமலிகரத்தன்மூவிலைவேலன்கரியுரிமூடியகண்ட- னலைமலிபுனல்சேர்சடைமுடியண்ணலாலவாயாவதும் இதுவே. ௬

முத்தின்றாழ்வடமுஞ் சந்தனக்குழம்புநீறுந்தன்மார்பினின்முயங்கப்-பத்தியார்கின்ற பாண்டிமாதேவி பாங்கொடுபணிசெய்நின்ற- சுத்தமார்பளிங்கின் பெருமலையுடனே சுடர்மரகதமடுத்தாற்போ - லத்தனாருமையோடின்புறுகின்றவாலவாயாவதும் இதுவே, ௭

காவணங்கியல்லா மஞ்செழுத்தோதிகல்லராப்கல்லியல்வாருங-கோவணம்பூதி சாதனங்கண்டார் ரெழுதெழுகுலச்சிறைபோற்ற- யேவணங்கியல்வாமிராவணன்றிண்டோளிருபதுநெறிதரவூன்றி-யாவணங்கொண்டசடைமுடியண்ண லாலவாயாவதுமிதுவே. அ

மண்ணெலாங்கழ மன்னனும்மன்னு மணிமுடிச்சோழன்றன்மகளாம்- பண்ணினேர்மொழியாள பாண்டிமாதேவிபாங்கினற்பணிசெய்துபரவ- விண்ணுளாரிருவர்கீழொடுமேலு மளப்பரிதாம்வகைநின்ற-வண்ணலாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே கூ

தொண்டராயுள்ளார் திசைதிசைதோறுந்தொழுதுதன்குலத்தினை குலாவக்- கண்டுநாடோறுமின்புறுகின்றகுலச்சிறைகருதிநின்றேத்த- குண்டராயுள்ளார்சாக்கியர்தங்கள்குறையின்கணெறியிடைவாரா-வண்டநாயகன்றானமர்ந்துவீற்றிருந்த வாலவாயாவதுமிதுவே

பன்னலம்புணரும் பாண்டிமாதேவிகுலசசிறையெனுமிவர்பணியு-மன்னலம்பெறுசீ ராலவாயீசன்றிருவடியாங்கவைபோற்றி - கன்னலம்பெரியகாழியுள்ஞானசம்பந்தன் செந்தமிழ்கோவை-யின்னலம்பாடவலலவரிமையோரேத்தவீற்றிருப்பவரினிதே. ௰க

திருநாவுக்கரையர் அருளிய

கோயிற்றிருநேரிசை-பண்-கொல்லி.

பத்தனாய்ப்பாடமாட்டேன்பரமனேபரமயோகி-யெத்தினாற் பத்திசெய்கேனென்னைநீ யிகழவேண்டா-முத்தனேமுதல்வாதில்லை யம்பலத்தாடுகின்ற- வத்தா

வுன்றுடல்காண்பா னடியனேன்வந்தவாறே. ௧

கருத்தனைப்பாடமாட்டேன் காம்பனதோளியங்கா, வொருத்தாலறியவொண்ணாத்- திருவுருவுடைய சோதி-திருத்தமாந்தில்லைதன்னுட்டிகழ்ந்தசிற்றம்பலத்தே-நிருத்தனைக்காணவேண்டி நேர்படவந்தவாறே.

கேட்டிலேன்கிளைபிரியேன்| கேட்குமாகேட்டியாஇல் - ரூட்டினேனின்றன்பாத நடுப்படநெஞ்சினுள்ளே- மாட்டினீர்வாளைபாயு மல்குசிற்றபலத்தே- கூட்டமாகுவிமுலையாள் கூடநீயாடுமாறே, ௩

சிந்தையைத்திகைப்பியாதே செறிவுடையடிமைசெய்ய- வெந்தைநீயருளிச்செய்யா யாதுநான் செய்வதென்றே- செந்திபார்வேள்வியோவாத் தில்லைசிற்றம்பலத்தே-யந்தியும்பகலுமாடவடியிணையலசுங்கொல்லோ

கண்டவர்திரிந்துநாளுங் கருத்தினுனின்றன்பாதங்-கொண்டிருந்தாடிப்பாடிக்கூடுவன்குறிப்பினாலே- வண்டுபண்பாடுஞ்சோலை மல்குசிற்றம்பலத்தே - யெண்டிசையோருமேற்ற விறைவநீயாடுமாறே. ரு

பார்த்திருந்தடியனேனேன் பரவுவன்பாடியாடி-மூர்த்தியேயென்பனுன்னை மூவரின்முதல்வனென்ப-னேத்துவாரிடர்கடீர்ப்பாய் தில்லைசிற்றம்பலத்துக்-கூத்தாவுன்கூத்துக்காண்பான் கூடநான்வந்தவாறே. ௬

பொய்யினைத்தவிரட்டுப் புறமலர்வடிமைசெய்ய வையநீயருளிச்செய்யா யாதியேயாதிமூர்த்தி- வையக

ந்தன்னின்மிக்க மல்குசிற்றம்பலத்தே பையவுன்னாட்
ல்காண்பான் பரமனை வந்தவாறே. எ

மனத்தினுற்றிகைத்து நாளு - மாண்பலநெறிகண்மே
லேகளைப்பாரெல்லன்செய்கேனோகறையணிகண்டத்தா
னே-நினைத்திவேதங்குன்றாத்தில்லைசிற்றம்பலத்தே
யனைத்துநின்னையங்காணபாணடியனேனைவந்தவாறே.

நெஞ்சினைத் தூய்மைசெய்து நினைக்குமாநினைப்பி
யாதே-வஞ்சமேசெய்தியாலோவானவர்தலைவனே நீ- ம
ஞ்சுடைச் சோலைத்தில்லை மல்குசிற்றம்பலத்தே யஞ்
சொலாளகாணநின்று வழகனியாடுமாறே அ

மண்ணுண்டமாலவனு மலர்மிசை மன்னினானும்-வி
ண்ணுணடதிருவுருவம் விருப்பினார் காணமாட்டார்-இ
ண்ணுண்ட திருவேமிக்க தில்லைசிற்றம்பலத்தே-பண்
ணுகூடபாடலோடு பரமநீயாடுமாறே ௯

திருநாவுக்கரையர் அருளியநமச்சிவாயப்பதிகம்.

பண்-காந்தாரபஞ்சமம்.

சொற்றுணைவேதியன் சோதிவானவன்
பொற்றுணைத்திருந்தடி பொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர் கடலிற்பாய்ச்சினு
நற்றுணையாவது நமச்சிவாயவே. க

பூவினுக்கருங்கலம் பொங்குதாமரை
யாவினுக்கருங்கல மானைஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங் கோட்டமுளது
நாவினுக்கருங்கல நமச்சிவாயவே உ

விண்ணுறவடுக்கிய விறக்கின்மேல்விழ

லுண்ணியபுகிலவை யொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற் பயின்றபாவத்தை
நண்ணிநின்றறுப்பது நமச்சிவாயவே. ௩
இடுக்கண்பட்டிருக்கினு மிரந்தியாரையும்
விடுக்கிற்பிரானென்று வினவுவோமல்லோ
மடுக்கற்கீழ்க்கிடக்கினு மருளினாமுற்ற
நடுக்கத்தைக்கெடுப்பது நமச்சிவாயவே ௪
வெந்தநீறருங்கலம் விரதிகட்கெல்லா
மந்தணர்க்கருங்கல மருமறையாறங்கந்
திங்களுக்கருங்கலந் திகழுநீண்முடி
நங்களுக்கருங்கல நமச்சிவாயவே. ௫
சலமிலன்சங்கரன் சார்ந்தவர்க்கல்லா
னலமிலனாடொறு நல்குவானலன்
குலமிலராகினுங் குலத்துக்கேற்பதோர்
நலமிகக்கொடுப்பது நமச்சிவாயவே. ௬
வீடினாருலகினில் விழுமியதொண்டர்
கூடினாரந்நெறி கூடச்சென்றலு
மோடினேனோடிச்சென் றுருவங்காண்டலு
நாடினேனாடிற்று நமச்சிவாயவே. ௭
இல்லகவிளக்கது இருள்கெடுப்பது
சொல்லகவிளக்கது சோதியுள்ளது
பல்லகவிளக்கது பலருங்காண்பது
நல்லகவிளக்கது நமச்சிவாயவே. ௮
முன்னெறியாகிய முதல்வன் முக்கணன்
றன்னெறியேசரணாதறிண்ணமே

பன்னெறியேசென்றங் கடைந்தவர்க்கெலா
நன்னெறியாவது நமச்சிவாயவே. ௯
மாப்பிணைதழுவிய மாதோர்பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக்கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக் கிடுக்கணில்லையே. ௰

திருநாவுக்கரையர் அருளியகோயிற்றிருவிருத்தம்.

பண்-கொல்லி.

பாளையுடைக்கழுகோங்கிப் பன்மாடநெருங்கியெங்கும்-வாளையுடைப்புனல்வந்தெறிவாள் வயற்றில்லைத்தன்னு- ளாளவுடைக்கழற் சிற்றப்பலந்தரனாடல்கண்டாற்,பீளையுடைக்கண்களாற்பின்னைப்போய்த்தொண்டர்காண்பதென்னே. ௧

பொருவிடையொன்றுடைப் புண்ணியமூர்த்திபுலியதள- னுருவிடையமலைமங்கை மணாளனுலகுக்கெல்லாந்- திருவுடையந்தணர் வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன் - றிருவடியைக்கண்டகண்கொண்டு மற்றினிக்காண்பதென்னே. ௨

தொடுத்தமலரொடு- தூபமுஞ்சாந்துங்கொண்டெப்பொழுது-மடுத்துவணங்குமயனொடுமாலுக்குங்காண்பரியான- பொடிக்கொண்டணிந்துபொன்னாகியதில்லைச்சிற்றம்பலவா-னுடுத்தததுகில்கண்ட கண்கொண்டுமற்றினிகாண்பதென்னே. ௩

வைச்சபொருணமக் காகுமென்றெண்ணி நமச்சிவாய-வச்சமொழிந்தேனணிதில்லையம்பலத்தாடுகின்ற-

பிச்சன்பிறப்பிலிபேர்நந்தியுந்தியின்மேலசைத்த- கச்சி
னழகுகண்டாற்பின்னைகண்கொண்டுகாண்பதென்னே
செய்ஞ்ஞின்றநீலமலர் கின்றதில்லைசிற்றம்பலவ
ன்-மைஞ்ஞின்றவொண்கண் மலைமகள்கண்டுமகிழ்ந்து
நிற்க- நெஞ்ஞின்றெறியும்விளக்கொத்தநீலமணிமிடற்
றன் -கைஞ்ஞின்றவாடல்கண்டாற் பின்னைக்கண்கொ
ண்டு காண்பதென்னே. ௫

ஊனத்தைநீக்கியுலகறியவென்னையாட் கொண்ட
வன் - றேனொத்தெனக்கினியான் றில்லைச்சிற்றம்பலவ
னெங்கோன்-வானத்தவருய்ய வன்னஞ்சையுண்டகண்
டத்திலங்கு-மேனத்தெயிறுகண்டாற் பின்னைகண்கொ
ண்டுகாண்பதென்னே ௬

தெரித்தகணையாற் றிரிபுரமூன்றுஞ் செந்தியின்மூ
ழ்க-வெரித்தவிறைவ னிமையவர்கோமானிணையடிக-ட
ரித்தமனத்தவர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்-சிரித்
தமுகங்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே

சுற்றுமமரர்சுரர்பதிநின்றிருப் பாதமல்லாற் -பெற்
றோனறிலோமென் றழைப்பப்பரவையு ணஞ்சையுண்
டான்-செற்றங்கனங்கனை திவிழித்தான் றில்லையம்பலவ-
னெற்றியிற்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்
னே. ௮

சித்தத்தெழுந்தசெழுங்கமலத்தன்னசேவடிக்கண்-
வைத்தமனத்தவர் வாழ்கின்றதில்லைசிற்றம்பலவன்-மு
த்தும்வயிரமுமாணிக்கந்தன் னுள்விளங்கிய தூ.மந்தம
லர்ககண்ட கண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே.()

தருக்கிமிகுத்துத் தன்றோள்வலியுன்னித் தடவரை-வரைக்கைகளாலெடுத்தார்ப்பமலைமகள்கோன்சிரித்து-வரக்கன்மணிமுடிபத்துமணித்தில்லையம்பலவ-னெருக்கிமிறித்த விரல்கண்ட கண்கொண்டு காண்பதென்னே.

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரையா அருளிச்செய்ததிருவண்ணாமலை.

திருநேரிசை-பண்-கொல்லி.

ஓதியாவலர்சடுலி புமையவள்பங்காமிக்க - சோதியேதுலங்குமெண்டோட்சுடர்மழுப்படையினானே-யாதியேயமரர்கோவே யணியணாமலையுளானே- நீதியானின்னையல்லா னினையுமாநினைவிலேனே. க

பண்டனைவென்றவின்சொற்பாவையோர்பங்கநீல-கண்டனேகார்கொள்கொன்றைக்கடவுளேகமலபாதா அண்டனேயமரர்கோவேயணியணாமலையுளானே- தொண்டனேனுன்னையல்லாற்சொல்லுமாசொல்லிலேனே.

உருவமுமுயிருமாகியோதியவுலகுக்கெல்லாப்-பெருவினைபிறப்புவீடாய் நின்றவெம்பெருமான்மிக்க-வருவிபொன்சொரியுமண்ணாமலையுளாயண்டர்கோவே-மருவினின்பாதமல்லான்மற்றொன்றுமாடிலேனே. ங

பைம்பொன்னே பவளக்குன்றே பரமனேபால்வெண்ணீற்றா-செம்பொன்னேமலர்செய்பாதாசீர்சருமணியேமிக்க-வம்பொன்னேகொழித்துவீழுமணியணாமலையுளானே-யென்பொனே யுன்னையல்லா லேதுநானினைவிலேனே. ச

பிறையணி முடியிறைவனே பிஞ்ஞகா பெண்ணோர்பா
கா-மறைவலா இறைவா வண்டார்கொன்றையாய்வாமதே
வா-வறைகழலமரரேத்துமணியண்ணாமலையுளானே-யிறை
வனேயுனையல்லா லியாதுநானினைவிலேனே. ௫

புரிசடை-முடியின்மேலோர்பெருபுனற்கங்கைவை
த்துக்-கரியுரிபோர்வையாகக்கருதியகாலகாலா- வரிகு
லமலிந்தவண்ணாமலையுளாயலரின்மிக்க- வரிமிகுவண்டு
பண்செய்பாதநான்மறப்பிலேனே ௬

இரவியுமதியும்விண்ணு மிருநிலம்புனலுங்காற்று-
மூரகயார்புனமெட்டுந் திசையொளியுருவமானா-யரவ
ட்டுமணிகள்சோதியணியண்ணாமலையுளானே-பரவுநின்பா
தமலலாற் பரமநான்பற்றிலேனே ௭

பார்த்தனுக்கன்றுநல்கிப்பாசுபதத்தையீந்தாய்-நி
ர்த்ததும்புலவுகங்கைநெடுமுடிநிலாவைவைத்தா -யார்
த்துவந்திஞ்சிகொண்டவணியண்ணாமலையுளானே-தீர்த்த
னேநின்றன்பாதத்திறமலாற்றிறமிலேனே ௮

பாலுநெய்முதலாமிக்கபசுவிலைந்தாடினானே-மா
லுநான்முகனுங்கூடிக் காண்கிலாவகையுனின்ற -பா
லுநீர்கொண்டல்சூழ மணியண்ணாமலையுளானே - வாலு
டைவிடையாயுன்றன் மலரடிமறப்பிலேனே ௯

இரக்கமொன்றியாதுமில்லாக் காலனைக்கடந்த
வெம்மா-னுரத்தினால்வரையையூக்க வொருவிரனுதியி
னாலேயரக்கனைநெறித்தவண்ணாமலையுளாயமரரேறே-சி
ரத்தினால்வணங்கியேத்தித் திருவடிமறப்பிலேனே ௰

திருநாவுக்கரையர் அருளிய
கோயிற்றிருவிருத்தம்-பண்-கொல்லி

கருநட்டகண்டனையண்டத்தலைவனைக்கற்பகத்தைச்
செருநட்டமும்மதிலெய்யவல்லானைச்செந்தீமுழங்கத்-
திருநட்டமாடியைத்தில்லைக்கிறையைச் சிற்றம்பலத்து
ப்பெருநட்டமாடியைவானவர்கோனென்றுவாழ்த்துவ
னே ஒன்றியிருந்துநினைமின்மகளுந்தமக்கூனமில்லைக்
கன்றியகாலனைக்காலாற்கடிந்தா னடியவர்க்காச்-சென்
றுதொழுமின்க டில்லையிற்சிற்றம்பலத்துநட்ட-மென்று
வந்தாயென்று மெம்பெருமான்றன் றிருக்குறிப்பே. ()
கன்மனவீர்கழியுங் கருத்தேசொல்லிக் காண்பதெ
ன்னே- நன்மனவாணவிற் றில்லையிற்சிற்றம்பலத்துநட்
டம்-பொன்மலையில்வெள்ளிக்குன்றதுபோலப்பொலிந்
திலங்கி-யென்மனமேயொன்றிப் புக்கனன்போந்தசுவ
டில்லையே. ௩

குனித்தபுருவமுக்கொவ்வைச்செவ்வாயிற் குமிழ்சி
ரிப்பும்-பனித்தசடையும் பவளம்போன்மேனியிற் பால்
வெண்ணீறு-மினித்தமுடையவெடுத்தபொற்பாதமுங்
காணப்பெற்றால்- மனித்தப்பிறவியும் வேண்டுவதே
யிந்தமாநிலத்தே. ௪

வாய்த்ததுநந்தமக்கீதோர்பிறவிமதித்திடுமின் பார்த்
தற்குப்பாசு பதமருள்செய்தவன்பத்தருள்வீர்-கோத்
தன்றுமுப்புரந்தீவளைத்தான்றில்லையம்பலத்துக்-கூத்த
னுக்காட்பட்டிருப்பதன்றோ நந்தங்கூழையே. ௫

பூத்தனபொற்சடைபொன்போன்மிளிரப்புரிகணங்
ய்- ளார்த்தனகொட்டியரிந்தனபல்குறட்பூதகணந்-தே
கத்தனவென்றிசைவண்டுகள்பாடுசிற் றம்பலத்துக்-கூ
த்தனிற்கூத்துவல்லாருளரோவென்றன் கோல்வளைக்
கே. முடிகொண்டமத்தமு முக்கண்ணினோக்கு முறுவ
லிப்புங்-துடிகொண்டகையுந் துதைந்தவெண்ணீறுஞ்சு
ரிகுழலாள்- படிகொண்டபாகமும் பாய்புலித்தோலு
மென்பாவிநெஞ்சிற் - குடிகொண்டவர்தில்லையம்பலக்
கூத்தன்குரைகழலே ௭

படைக்கலமாகவுன்னாமத்தெழுத்தஞ்சென்னாவிற்கொ
ண்டேன் - னிடைக்கலமல்லேனெழுபிறப்பும் முனக்காட்
செய்கின்றேனை - றுடைக்கினும்போகேன் றொழுதுவ
ணங்கித்தூநீறணிந்துன் -னடைக்கலங்கண்டாயணிதி
ல்லைச்சிற்றம்பலத்தரனே. ௮

பொன்னொத்தமேனியில் வெண்ணீறணிந்துபுரிச
டைக்கண் - மின்னொத்திலங்கப்பலிதேர்ந்துழலும் விட
ங்கர்வேடஞ்-சின்னதினான்மலி தில்லையுற்சிற்றம்பலத்
துநட்ட- மென்னத்தனுடல்கண்டின்புற்றதாலிவ்விரு
நிலமே. ௯

சாடவெடுத்துத்தக்கன்றன்வேள்வியிற்சந்திரனை-வீ
டவெடுத்தது காலனை நாரணனான்முகனுந்-தேடவெ
டுத்தது தில்லையுட்சிற்றம்பலத்துநட்ட - மாடவெடுத்
திட்டபாதமன்றோநம்மை யாட்கொண்டதே. ௰

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரையர் அருளிய
கோயிற்பெரிய திருத்தாண்டகம்.

அரியானையந்தணர்தஞ் சிந்தையானையருமறையினகத்தானையணுவையார்க்குந்-தெரியாததத்துவனைத்தேனைப்பாலைத்-திகழொளியைத்தேவர்கடங்கோனைமற்றைக்- கரியானைநான்முகனைக் கனலைக்காற்றைக்-கனைகடலைக்குலவரையைக்கலந்துநின்ற- பெரியானைப்பெரும்பற்றப்புலியூரானைப்-பேசாதநாளெல்லாம்பிறவாநாளே.

கற்றானைக்கங்கைவார் சடையான்றன்னைக்-காவிரிசூழ்வலஞ்சுழியுங்கருதினானை- யற்றார்க்குமலந்தார்க்குமருள்செய்வானை-யாரூரும்புகுவானையறிந்தோமன்றே,மற்றாருந் தன்னொப்பாரில்லாதானை-வானவர்களெப்பொழுதும் வணங்கியேத்தப்-பெற்றானைப்பெரும்பற்றப் புலியூரானைப்-பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. ௨

கருமானினுரியதளேயுடையாய்வீக்கிக்-கனைகழல்கள் கலந்தொலிப்பவனல்கையேந்தி -வருமானத்திரடோள் கண்மட்டித்தாட வளர்மதியஞ்சடைக்கணிந்து மானேர் நோக்கி-யருமானவாண்முகத்தாளமர்ந்துகாண மமரர்கணமடிவணங்கவாடுகின்ற - பெருமானைப் பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம்பிறவாநாளே ௩

அருந்தவர்கடொழுதேத்துமப்பன்றன்னை- யமரர்கடம்பெருமானையரனைமூவா-மருந்தமரர்க்கருள்புரிந்த மைந்தன்றன்னை மறிகடலுங்குலவரையு மண்ணும்விண்ணுந்-திருந்தொளியதாரகையுந்திசைகளெட்டுந்தி

ஙிசுடர்சுடோரிரண்டும்-பிறவுமாயபெருந்தகையைப்பெரு
ம்பற்றப்புலியூரானைப்- பேசாதநாளெல்லாம் பிறவாநா

அருந்துணையையடியார்தம் மல்லறீர்க்கு-மருமரு
ந்தையகன் ஞாலத்தகத்துட்டோன்றி வருந்துணையுஞ்
சுற்றமும்பற்றும்விட்டு - வான்புலன்களகத்தடக்கிமட
வாரோடு-பொருந்தணைமேல்வரும்பயனைப்போகமா
ற்றிப்-பொதுநீக்கித்தனைநினையவல்லோர்க்கென்றும்-
பெருந்துணையைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாத
நாளெல்லாம்பிறவாநாளே. ௬

கரும்பமரும்மொழிமடவாள்பங்கன்றன்னைக்-கனவ
யிரக்குன்றனைய காட்சியானை - யரும்பவரும்பூங்கொன்
றைத்தாரான்றன்னை யருமறையோடாறங்கமாயினானை
ச்-சுரும்பமருங்கடிபொழில்கள்சூழ்தென்னாரூர்ச்சுடர்க்கொ
ழுந்தைத்துளக்கிலாவிளக்கைமிக்க- பெரும்பொருளைப்
பெரும்பற்றப்புலியூரானை பேசாதநாளெல்லாம்பிறவா

வருப்பியனையெழுநரப்பினோசையானை-வரைசிலையா
வானவர்கண்முயன்றவாளி யருப்பயஞ்செய் யவுணர்
புரமெரியக்கோத்த- வம்மானையலைகடனஞ்சையின்றா
ன்றன்னைச் - சுரும்பமருங் குழன்மடவார் கடைக்க
ணோக்கிற்- றுளங்காதசிந்தையராய்த் துறந்தோருள்ள
ப்-பெரும்பயனைப் பெரும்பற்றப்புலியூரானைப்-பேசா
தநாளெல்லாப்பிறவாநாளே. ௭

காரானையுரிவைப்போர்வையானைக்காமருபூங்
கச்சியேகம்பன்றன்னை-யாரேனுமடியவர்கட்கணியான்

றன்னை - யமரர்களுக் கறிவறியவளவிளானைப்-பாரோ
ரும்விண்ணோரும்பணியநட்டம் - பயில்கின்றபரஞ்சுட
ரைப்பரனை யெண்ணில் - பேரானைப்பெரும்பற்றப்புலி
யூரானைப்-பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. அ

முற்றாதபான்மதியஞ்சூடினானை மூவுலகுந்தானாயமு
தல்வன்றன்னைச் - செற்றார்கள்புரமூன்றுஞ் செற்றா
ன்தன்னைத் -திகழொளியைமரகதத்தைத்தேனைப்பாலை
க்-குற்றாலத்தமர்ந்துறையுங்குழகன்றன்னைக் கூத்தாட
வல்லானைக்கோனைஞானம்- பெற்றார்கள்பெரும்பற்றப்
புலியூரானைப் பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. க

காரொளியதிருமேனிச் செங்கண்மாலும்-கடிக்கம
லத்திருத்தயனுங்காணவண்ணஞ் -சீரொளியதழற்பிழ
ம்பாய்நின்றதொல்லைதிகழொளியைச்சிந்தனையின்மய
க்கந்தீர்க்கும்பேரொளியையிருநிலனும்விசும்புமற்றுமே
ழுலகுக்கடந்தண்டத்தப்பாநின்ற-பேரொளியைப்பெ
ரும்பற்றப் புலியூரானைப் -பேசாதநாளெல்லாம்பிறவா

திருநாவுக்கரசு சுவாமிக ளருளிய

திருவதிகை திருவீரட்டாணம்.

கூற்றாயினவாறுவிலக்கிலீர் கொடுமைபல்செய்தன
நானறியே - னேற்றாயடிக்கேயிரவும்பகலும்பிரியாதுவ
ணங்குவனெப்பொழுதுந் - தோற்றாதென் வயற்றினக
ம்படியேகுடரோடு துடக்குமுடக்கியிட- வாற்றேனடி
யேன்திகைக்கெடில வீரட்டானத்துறையம்மானே. க

நெஞ்சமுமக்கேயிடமாக வைத்தேனினையாதொரு போதுமிருந்தடியேன்-வஞ்சமறிதுவொப்பது கண்டறியேன் வயிற்றேடுதுடக்கிமுடக்கியிடநஞ்சாகி வந்தென்னை நலிவதனை நணுகாமற்றுரந்துகரந்துமடு- ரஞ்செலுமெண்ணீரதிகைககெடில-வீரட்டானத்துறையம்மா

பணிந்தாரனபாவங்களபாற்றவல்லீர்படிவெண்டலையிற் -பலிகொண்டுழலவீர்துணிந்தேயுயககாட் செய்துவாழலுற்றூர் - சுடுகின்றதசூலைதவிர்த்தருளீர்-பிணிந்தாரபொடிக்கொண்டுமெய்ப்பூசவல்லீர்பெற்றமேற்றுகந்தீர் சுற்றுப்பெண்டலைகொண்- டணிந்திரடிக்கேளதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. ரு

முன்னமடியே னறியாமையினுன் முனிந்தென்னை நணிந்துமுடக்கியிடப்- பின்னையடியேனுமககாளும்பட்டேன் சுடுகின்றதுசூலைதவிர்த்தருளீர் - தன்னையடைந்தார்வினைதீர்ப்பதன்றேதலையாயவர்தங்கடனாவதுதா- னன்னநடையாரதிகைக்கெடில வீரட்டானத் துறையம்மானே. சு

காத்தாள்பவர்காவலிகழ்ந்தமையாற் கரைநின்றவர்கண்டுகொளென்றுசொல்லி- நீத்தாயகம்புகநூககியிடநிலைக்கொள்ளுமவழித்துறையொன்றறியேன்-வார்த்தையிதுவொப்பதுகேட்டறியேன் வயிற்றேடுதுடக்கிமுடக்கியிட-வார்த்தார்புனலா ரதிகைக்கெடிலவீரட்டானத்துரையம்மானே எ

சலம்பூவொடுதூபமறந்தறியேன் றமிழோடிசைபாடல்மறந்தறியே-னலந்தீங்கிலுமுன்னை மறந்தறியேனு

ன்னாமமென்னாவின் மறந்தறியே- னுலந்தார்தலையிற்ப
லிகொண்டுழல்வா யுடலுள்ளுறுசூலைதவிர்த்தருளா -ய
லந்தேனடியே னதிகைக்கெடில வீரட்டானத்துறைய
ம்மானே ௬

உயர்ந்தேன் மனைவாட்சழிமொண்பொருளு மொ
ருவர்தலைகாவலிலாமையினால்- வயந்தேயுமக்காட்செய்
துவாழலுற்றால் வலிக்கின் றுசூலைதவிர்த்தருளீர்-பயந்தே
யென்வயிற்றி னகம்படியே பறித்துப்புரட்டியறுத்திர்
த்திடநா-னயர்ந்தேனடியேனதிகைக்கெடில்வீரட்டா
னத்துறையம்மானே. ௭

வலித்தேன்மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன் வஞ்சம்
மனமொன்று மிலாமையினாற் -சலித்தாலொருவர்துணை
யாருமில்லைச்சங்கவெண்குழைக்காதுடையெம்பெருமா
ன்-கலித்தேயென்வயிற்றி னகம்படியேகலக்கிமலக்கிட்
டுக்கவர்ந்துதின்ன - வலித்தேனடியேனதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. ௮

பொனபோலமிளிர்வதோர் மேனியினீர் புரியின்ச
டையீர்மெலியும்பிறையீர், துன்பேகவலைபிணியென்றி
வற்றைநணுகாமற் றுரந்துகரந்துமிடு- ரெனபோலி
கணும்மையினித்தெளியாரடியார்படுவதிதுவேயாகி -ல
ன்பேயமையு மதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்
மானே. ௯

போர்த்தாயங் கோரானையினிலுரிதோல் புறங்காட
ரங்கடமாடவல்லா -யார்த்தானரக்கன் றனைமாலவ
ரைக்கீழடர்த்திட்டருள்செய்தவதுகருதாய்-வேர்த்தும்

புரண்டும்வீழ்ந்துமெழுந்தாலென்வேதனையாளவிலக்
கியிடா-யார்த்தாரபுனல் சூழதிகைக்கெடில வீரட்டா
னத்துறையம்மானே ௰

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த
திருவெண்ணைநல்லூர்பண்-இந்தளம்.

பித்தாபிறைசூடிபெருமானே யருளாளா- வெத்தா
ன்மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை- வைத்தா
ய்பெண்ணைத்தென்பால் வெண்ணைநல்லூ ரருட்டுறை
யு-ளத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே ௧.

நாயேன்பலநாளுநினைப் பின்றிமனத்துன்னைப்- பே
யாய்த்திரிந் தலைந்தேன்பெற லாகாவருள்பெற்றேன்-
னேயார்பெண்ணைத்தென்பால்வெண்ணை நல்லூரருட்
டுறையு-ளாயாயுனக்காளாயினி யல்லேனெனலாமே ௨.

மன்னேமறவாதேநினைக்கின்றேன் மனத்துன்னைப்-
பொன்னேமணிதானேவயிரம்மேபொருதுந்தி-மின்னா
ர்பெண்ணைத் தென்பால்வெண்ணை நல்லூரருட்டுறை
யு-ளன்னேயுனக்காளாயினியல்லேனெனலாமே. ௩.

முடியேனினிப்பிறவேன்பெறின் மூவேன்பெற்றமூ
ர்த்தி- கொடியேன்பலபொய்யேயுரைப் பேனைக்குறிக்
கொண்ணீ - செடியார்பெண்ணைத் தென்பால் வெண்
ணைநல்லூரருட்டுறையு- ளடிகேளுனக்காளாயினி யல்
லேனென்னலாமே ௪

பாதம்பணிவார்கள்பெறும் பண்டம்மதுபணியா-யா
தன்பொருளானேனறிவில்லேனருளாளா- தாதார்ம

ண்ணைத்தென்பால்வெண்ணை நல்லூரருட்டுறையு-ளா
தியுனக்காளாயினி யல்லேனெனலாமே. ௫

தண்ணார்மதிசூடித்தழல போலுந்திருமேனி-யெண்
ணார்புரமூன்றுமெரியுண்ணநகைசெய்தாய்- மண்ணார்
பெண்ணைத்தென்பால்வெண்ணைநல்லூரருட்டுறையு-
ளண்ணாவுனக்காளாயினி யல்லேனெனலாமே. ௬

ஊனாயுயிரானாயுட லானாயுலகானாய்- வானாய்நில னா
ய்கடலானாய் மலையானாய்- தேனார்பெண்ணைத் தென்
பால் வெண்ணைநல்லூரருட்டுறையு-ளானாயுனக்காளா
யினியல்லேனெனலாமே. ௭

ஏற்றார்புரமூன்றுமெரியுண்ணச்சிலைதொட்டாய்-தே
ற்றாதனச்சொல்லித்திரிவேனோசெக்கர்வானி - யேற்றா
யபெண்ணைத் தென்பால்வெண்ணைநல்லூரருட்டுறை
யு-ளாற்றாடுனக்காளாயினியலலேனெனலாமே. ௮

மழுவாள்வல னேந்தீமறையோதிமங்கைபங்கா-தொ
ழுவாரவர்துயராயின தீர்த்தலுன்றொழிலே -செழுவா
ரபெண்ணைத்தென்பாலவெண்ணைநல்லூரருட்டுறையு
ளழகாவுனக்காளாயினியல்லேனெனலாமே. ௯

காரூ புனலெய்திக்கரை கல்லித்திரைக்கையாற் - பா
ரூர்புகழெய்த்திகழ்பன்மாமணியுந்திச் -சீரூர்பெண்ணை
த்தென்பால்வெண்ணைநல்லூரருட்டுறையு-ளாரூரனெ
ம்பெருமாற்காளல்லேனெனலாமே. ௰

தேவாரப்பதிகங்கள்- முற்றிற்று.